**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# பெற்றோர்களையும், மூத்த குடிமக்களையும் பேணுதல் மற்றும் நல்வாழ்வு சட்டம், 2007

**(எண் 56/2007)**

**(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)**

# THE MAINTENANCE AND WELFARE OF PARENTS AND SENIOR CITIZENS ACT, 2007

**(No. 56 of 2007)**

**(As on 31st October, 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# பெற்றோர்களையும், மூத்த குடிமக்களையும் பேணுதல் மற்றும் நல்வாழ்வு சட்டம், 2007

(எண் 56/2007)

# THE MAINTENANCE AND WELFARE OF PARENTS AND SENIOR CITIZENS ACT, 2007

(No. 56 of 2007)

# PREFACE

This edition of the Maintenance and Welfare of Parents and Senior Citizens Act, 2007 (No. 56 of 2007) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, section 1, Vol. I dated 13th March, 2021 on Pages from 223 to 238.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
13th March, 2021. *Secretary to Government of India*.

# முன்னுரை

2021, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள பெற்றோர்களையும், மூத்த குடிமக்களையும் பேணுதல் மற்றும் நல்வாழ்வு சட்டம், 2007 (சட்ட எண் 56/2007) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2021, மார்ச் 13 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 223 முதல் 238 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிப்பெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
13, மார்ச் 2021. இந்திய அரசு செயலாளர்.

# THE MAINTENANCE AND WELFARE OF PARENTS AND SENIOR CITIZENS ACT, 2007

**(No. 56 of 2007)**

## ARRNGEMENT OF SECTIONS

## CHAPTER I

## PRELIMINARY

**SECTIONS** **Page No.**


1. Short title, extent, application and commencement. 1
2. Definitions. 1
3. Act to have overriding effect. 3


## CHAPTER II

## MAINTENANCE OF PARENTS AND SENIOR CITIZENS


4. Maintenance of parents and senior citizens. 3
5. Application for maintenance. 4
6. Jurisdiction and procedure. 5
7. Constitution of Maintenance Tribunal. 7
8. Summary procedure in case of inquiry. 7
9. Order for maintenance. 7
10. Alteration in allowance. 8
11. Enforcement of order of maintenance. 8
12. Option regarding maintenance in certain cases. 8
13. Deposit of maintenance amount. 9
14. Award of interest where any claim is allowed. 9
15. Constitution of Appellate Tribunal. 9
16. Appeals. 9
17. Right to legal representation. 10
18. ıintenance Officer. 10

# பெற்றோர்களையும், மூத்த குடிமக்களையும் பேணுதல் மற்றும் நல்வாழ்வு சட்டம், 2007

(எண் 56/2007)

## பொருளடக்கம்

## அத்தியாயம் I

## முன்னுரை

பிரிவுகள் | பக்கம்


| பிரிவுகள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள் வரையறைகள். | 1 |
| 3. | சட்டம் மீதூர்ந்து இயங்கும் செல்திறத்தைக் கொண்டிருத்தல் | 3 |


## அத்தியாயம் II

## பெற்றோர்களையும் மூத்த குடிமக்களையும் பேணுதல்


| | | |
|---|---|---|
| 4. | பெற்றோர்களையும் மூத்த குடிமக்களையும் பேணுதல். | 3 |
| 5. | பேணுதலுக்கான விண்ணப்பம். | 4 |
| 6. | அதிகாரவரம்பு மற்றும் நெறிமுறை. | 5 |
| 7. | பேணுகைத் தீர்ப்பாயத்தை அமைத்தல். | 7 |
| 8. | விசாரணையின் நேர்வில் சுருக்குமுறை நெறிமுறை. | 7 |
| 9. | பேணுதலுக்கான ஆணை. | 7 |
| 10. | படித்தொகையில் மாற்றம் செய்தல். | 8 |
| 11. | பேணுதலுக்கான ஆணையை நிறைவேற்றுதல். | 8 |
| 12. | குறித்த சில நேர்வுகளில் பேணுதல் குறித்த விருப்பத் தேர்வு. | 8 |
| 13. | பேணுகைத் தொகையை வைப்பீடு செய்தல். | 9 |
| 14. | கோருரிமை எதுவும் ஏற்றுக் கொள்ளப் படுகிற விடத்து வட்டியை விதித்தல். | 9 |
| 15. | மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை அமைத்தல். | 9 |
| 16. | மேல்முறையீடுகள். | 9 |
| 17. | சட்ட சார்பாற்றம் செய்வதற்கான உரிமை. | 10 |
| 18. | பேணுகை அலுவலர். | 10 |

## CHAPTER III

## ESTABLISHMENT OF OLDAGE HOMES

19. Establishment of oldage homes. 11

## CHAPTER IV

## PROVISIONS FOR MEDICAL CARE OF SENIOR CITIZEN

20. Medical support for senior citizens. 11

## CHAPTER V

## PROTECTION OF LIFE AND PROPERTY OF SENIOR CITIZEN

21. Measures for publicity, awareness, etc., for welfare of senior citizens. 12

22. Authorities who may be specified for implementing the provisions of this Act. 12

23. Transfer of property to be void in certain circumstances. 13

## CHAPTER VI

## OFFENCES AND PROCEDURE FOR TRIAL

24. Exposure and abandonment of senior citizen. 13

25. Cognizance of offences. 13

26. Officers to be public servants. 14

27. Jurisdiction of civil courts barred. 14

## CHAPTER VII

## MISCELLANEOUS

28. Protection of action taken in good faith. 14

29. Power to remove difficulties. 14

30. Power of Central Government to give directions. 14

31. Power of Central Government to review. 14

32. Power of State Government to make rules. 14

## அத்தியாயம் III

## முதியோர் இல்லங்களை நிறுவுதல்


19. முதியோர் இல்லங்களை நிறுவுதல். 11


## அத்தியாயம் IV

## மூத்த குடிமகனின் மருத்துவ கவனிப்பிற்கான வகையங்கள்


20. மூத்தகுடி மகனுக்கான மருத்துவ உதவி. 11


## அத்தியாயம் V

## மூத்த குடிமகனின் உயிர் மற்றும் சொத்துக்கான பாதுகாப்பு


21. மூத்த குடிமகனின் நல்வாழ்விற்காக விளம்பரம், விழிப்புணர்வு முதலியவற்றிற்கான நடவடிக்கை. 12

22. சட்டத்தின் வகையங்களை செயற்படுத்துவதற்கு குறித்துரைக் கப்படலாகும் அதிகார அமைப்புகள். 12

23. குறித்த சில சூழ்நிலைகளில் சொத்தின் உரிமைமாற்றம் இல்லா நிலையதாக இருத்தல். 13


## அத்தியாயம் VI

## குற்றச்செயல்கள் மற்றும் விசாரணைக்கான நெறிமுறை


24. மூத்த குடிமகனின் இடர் காப்பின்மை மற்றும் அவரை கைவிடுதல். 13

25. குற்றச் செயல்களை விசாரணை செய்தல். 13

26. அலுவலர்கள் அரசுப் பணியாளர்கள் ஆவர். 14

27. உரிமையியல் நீதி மன்றங்களின் அதிகாரவரம்பு தடை செய்யப் படுகிறது. 14


## அத்தியாயம் VII

## பல்வகை


28. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. 14

29. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கு அதிகாரம். 14

30. பணிப் புரைகளை வழங்குவதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். 14

31. மறுஆய்வு செய்வதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். 14

32. விதிகளைச் செய்வதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம். 14

# THE MAINTENANCE AND WELFARE OF PARENTS AND SENIOR CITIZENS ACT, 2007

**(No. 56 of 2007)**

[29th December, 2007.]

An Act to provide for more effective provisions for the maintenance and welfare of parents and senior citizens guaranteed and recognised under the Constitution and for matters connected therewith or incidental thereto.

BE it enacted by Parliament in the Fifty-eighth Year of the Republic of India as follows:—

## CHAPTER I

### PRELIMINARY

Short title, extent, application and commencement.

1. (1) This Act may be called the Maintenance and Welfare of Parents and Senior Citizens Act, 2007.

(2) It extends to the whole of India except the State of Jammu and Kashmir and it applies also it citizens of India outside India.

(3) It shall come into force in a State on such date as the State Government may, by notification in the Official Gazette, appoint.

Definitions.

2. In this Act, unless the context otherwise requires,—

(a) "children" includes son, daughter, grandson and grand-daughter but does not include a minor;

(b) "maintenance" includes provisions for food, clothing, residence and medical attendance and treatment;

# பெற்றோர்களையும், மூத்த குடிமக்களையும் பேணுதல் மற்றும் நல்வாழ்வு சட்டம், 2007

## (எண் 56/2007)

[2007, டிசம்பர் 29]

பெற்றோர்களையும், மூத்த குடிமக்களையும் பேணுவதற்காகவும் அவர்களின் நல்வாழ்விற்காகவும், அரசமைப்பின்படி உத்திரவாதமளிக்கப்பட்ட மற்றும் ஏற்பளிக்கப்பட்ட மிகவும் பயனுறு ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐம்பத்து எட்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2007 ஆம் ஆண்டு பெற்றோர்களையும், மூத்த குடிமக்களையும் பேணுதல் மற்றும் அவர்களின் நல்வாழ்வு சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும் [1]*** மற்றும் இந்தச் சட்டம், இந்தியாவிற்கு வெளியேயுள்ள இந்திய குடிமக்களுக்கும் கூட பொருந்தும்.

(3) இந்தச் சட்டம், மாநிலம் ஒன்றில், மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) ‘‘குழந்தைகள்’’ என்பது, மகன், மகள், பேரன் மற்றும் பேத்தியை உள்ளடக்கும், ஆனால் உரிமை வயது அடையாதவரை உள்ளடக்காது;

(ஆ) ‘‘பேணுதல்’’ என்பது, உணவு, உடை, உறைவிடம் மற்றும் மருத்துவக் கவனிப்பு மற்றும் சிகிச்சைக்கான ஏற்பாட்டினை உள்ளடக்கும்;

---

1. 34/2019 ஆம் சட்டத்தின் 95 ஆம் பிரிவு மற்றும் 5 ஆம் இணைப்புப்பட்டியலால் "ஜம்மு — காஷ்மீர் மாநிலம் நீங்கலாக" என்ற சொற்கள் (31—10—2019 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.

(c) "minor" means a person who, under the provisions of the Majority Act, 1875 is deemed not to have attained the age of majority; 9 /1875.

(d) "parent" means father or mother whether biological, adoptive or step father or step mother, as the case may be, whether or not the father or the mother is a senior citizen;

(e) "prescribed" means prescribed by rules made by the State Government under this Act;

(f) "property" means property of any kind, whether movable or immovable, ancestral or self acquired, tangible or intangible and includes rights or interests in such property;

(g) "relative" means any legal heir of the childless senior citizen who is not a minor and is in possession of or would inherit his property after his death;

(h) "senior citizen" means any person being a citizen of India, who has attained the age of sixty years or above;

(i) "State Government", relation to a Union territory, means the administrator thereof appointed under article 239 of the Constitution;

(j) "Tribunal" means the Maintenance Tribunal constituted under section 7;

(k) "welfare" means provision for food, health care, recreation centres and other amenities necessary for the senior citizens.

(இ) ‘‘உரிமை வயதை அடையாதவர்’’ என்பது, எந்த நபர்,
9/1875. 1875 ஆம் ஆண்டு இந்திய உரிமை வயதை எய்தியவர் சட்டத்தின் வகையங்களின்படி உரிமை வயதை எய்தாதவர் எனக் கொள்ளப்படுகிறாரோ அந்த ஒரு நபர் என்று பொருள்படும்;

(ஈ) ‘‘பெற்றோர்’’ என்பது, தந்தை அல்லது தாய், மூத்த குடிமகன் ஒருவராக இருந்தாலோ, இல்லாவிட்டாலோ, நேர்வுக்கேற்ப, உயிரியல் தனதாக ஏற்கப்பட்ட அல்லது மாற்றாந்தந்தை அல்லது மாற்றாந்தாயாக இருப்பினும் தந்தை அல்லது தாய் என்று பொருள்படும்;

(உ) ‘‘வகுத்துரைக்கப்பட்ட’’ என்பது, இந்தச் சட்டத்தின்படி மாநில அரசால் செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஊ) ‘‘சொத்து’’ என்பது, அசைவியல் அல்லது நிலையியல், மூதாதையர் வழியுரிமையான, தாமாக ஈட்டிய, பருப்பொருள் அல்லது புலனாகாத எவ்வகையினதுமான சொத்து என்று பொருள்படும்; மற்றும் அத்தகைய சொத்திலுள்ள உரிமைகள் அல்லது உரித்தங்களை உள்ளடக்கும்;

(எ) ‘‘உறவினர்’’ என்பது, உரிமை வயதை அடையாதவராக இல்லாத குழந்தை பேறு இல்லாத மூத்த குடிமகனின் சொத்தினைக் கையுடைமையில் கொண்டிருக்கிற அல்லது அவருடைய இறப்பிற்குப் பின்பு அவருடைய சொத்தினை மரபுரிமையாகப் பெறுகிற சட்டப்படியான வாரிசு எவரும் என்று பொருள்படும்;

(ஏ) ‘‘மூத்தக் குடிமகன்’’ என்பது, அறுபது அல்லது அதற்கு மேற்பட்ட வயதினை நிறைவெய்திய இந்தியக் குடிமகன் ஒருவராக இருக்கிற நபர் எவரும் என்று பொருள்படும்;

(ஐ) ஒன்றியத்து ஆட்சிநிலவரை தொடர்பாக ‘‘மாநில அரசு’’ என்பது, அரசமைப்பின் 239 ஆம் உறுப்பின்படி அமர்த்தப்பட்ட அதனின் ஆளுகையர் என்று பொருள்படும்;

(ஒ) ‘‘தீர்ப்பாயம்’’ என்பது, 7 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட பேணுதலுக்கான தீர்ப்பாயம் என்று பொருள்படும்;

(ஓ) ‘‘நல்வாழ்வு’’ என்பது, மூத்த குடிமக்களுக்குத் தேவைப்படும் உணவு, சுகாதாரக் கவனிப்பு, பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் பிற வசதிகளுக்கான ஏற்பாடு என்று பொருள்படும்.

Act to have overriding effect.

3. The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any enactment other than this Act, or in any instrument having effect by virtue of any enactment other than this Act.

## CHAPTER II

### MAINTAINANCE OF PARENTS AND SENIOR CITIZENS

Maintenance of parents and senior citizens.

4. (1) A senior citizen including parent who is unable to maintain himself from his own earning or out of the property owned by him, shall be entitled to make an application under section 5 in case of—

(i) parent or grand-parent, against one or more of his children not being a minor;

(ii) a childless senior citizen, against such of his relative referred to in clause (*g*) of section 2.

(2) The obligation of the children or relative, as the case may be, to maintain a senior citizen extends to the needs of such citizen so that senior citizen may lead a normal life.

(3) The obligation of the children to maintain his or her parent extends to the needs of such parent either father or mother or both, as the case may be, so that such parent may lead a normal life.

(4) Any person being a relative of a senior citizen and having sufficient means shall maintain such senior citizen provided he is in possession of the property of such citizen or he would inherit the property of such senior citizen:

**3.** இந்தச் சட்டத்தின் வகையங்கள், இந்தச் சட்டம் அல்லாத பிற செய்சட்டம் எதிலும் அல்லது இந்தச் சட்டம் அல்லாத பிற செய்சட்டம் எதனின் பயன்திறன்வழி செல்திறம் கொண்டுள்ள முறையாவணம் எதிலும் இதற்கு முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், செல்திறம் பெறும்.

சட்டம் மீதூர்ந்து இயங்கும் செல்திறத்தைக் கொண்டிருத்தல்.

## அத்தியாயம் II

## பெற்றோர்களையும் மூத்த குடிமக்களையும் பேணுதல்

**4.** (1) தன்னுடைய சொந்த வருவாயிலிருந்து அல்லது தனக்குச் சொந்தமான சொத்திலிருந்து தம்மைத் தாமே பேணிக் கொள்ள இயலாதிருக்கிற பெற்றோர் உள்ளடங்கலான மூத்த குடிமகன் ஒருவர் 5 ஆம் பிரிவின்படி,–

பெற்றோர்களையும் மூத்த குடிமக்களையும் பேணுதல்.

(i) பெற்றோர் அல்லது பெற்றோரின் பெற்றோராக இருக்கிற நேர்வில், உரிமை வயதை அடையாதவர் ஒருவராக இல்லாதிருக்கிற அவருடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு எதிராக; அல்லது

(ii) குழந்தை இல்லாத மூத்த குடிமகன் ஒருவராக இருக்கிற நேர்வில், 2 ஆம் பிரிவின் (எ) கூறில் சுட்டப்பட்டுள்ள அவருடைய அத்தகைய உறவினர்களுக்கு எதிராக

விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கு உரிமை கொண்டவர் ஆவார்.

(2) மூத்த குடிமகன் ஒருவரைப் பேணுவதற்கான குழந்தைகளின் அல்லது, நேர்வுக்கேற்ப உறவினரின் கடமைப் பொறுப்பானது, மூத்தகுடிமகனின் இயல்பான வாழ்க்கையை நடத்திச் செல்லலாகும் வகையில், அத்தகைய குடிமகனின் தேவைகளுக்கு நீட்டிக்கப்படுதல் வேண்டும்.

(3) அவருடைய அல்லது அவளுடைய பெற்றோர்களைப் பேணுவதற்கான குழந்தைகளின் கடமைப் பொறுப்பானது, அத்தகைய பெற்றோர் இயல்பான வாழ்க்கையை நடத்திச் செல்லலாகும் வகையில் அத்தகைய பெற்றோர்களில் தந்தைக்கோ அல்லது தாய்க்கோ அல்லது, நேர்வுக்கேற்ப, இருவருக்குமோ அவர்களின் தேவைகளுக்கு நீட்டிக்கப்படுதல் வேண்டும்.

(4) மூத்த குடிமகனின் உறவினர் ஒருவராகவும், போதுமான செல்வ ஆதாரத்தை கொண்டிருக்கிறவருமான நபர் எவரும், அத்தகைய மூத்தக் குடிமகனைப் பேணுதல் வேண்டும், ஆனால், அவர் அத்தகைய மூத்த குடிமகனின் சொத்தை கையுடைமையில் கொண்டிருக்கிறவராக அல்லது அத்தகைய மூத்த குடிமகனின் சொத்தினை வாரிசுரிமையில் பெறக்கூடியவராக இருத்தல் வேண்டும்:

Provided that where more than one relatives are entitled to inherit the property of a senior citizen, the maintenance shall be payable by such relative in the proportion in which they would inherit his property.

Application for maintenance.

5. (1) An application for maintenance under section 4, may be made—

(a) by a senior citizen or a parent, as the case may be; or

(b) if he is incapable, by any other person or organisation authorised by him; or

(c) the Tribunal may take cognizance suo motu.

Explanation.—For the purposes of this section "organisation" means any voluntary association registered under the Societies Registration Act, 1860 or any other law for the time being in force. 21/1860.

(2) The Tribunal may, during the pendency of the proceeding regarding monthly allowance for the maintenance under this section, order such children or relative to make a monthly allowance for the interim maintenance of such senior citizen including parent and to pay the same to such senior citizen including parent as the Tribunal may from time to time direct.

(3) On receipt of an application for maintenance under subsection (1), after giving notice of the application to the children or relative and after giving the parties an opportunity of being heard, hold an inquiry for determining the amount of maintenance.

(4) An application filed under sub-section (*2*) for the monthly allowance for the maintenance and expenses for proceeding shall be disposed of within ninety days from the date of the service of notice of the application to such person:

Provided that the Tribunal may extend the said period, once for a maximum period of thirty days in exceptional circumstances for reasons to be recorded in writing.

**வரம்புரையாக:** மூத்தக் குடிமகன் ஒருவரின் சொத்திற்கு, ஒன்றுக்கு மேற்பட்ட உறவினர்கள் வாரிசுரிமையில் உரிமை கொண்டவர்களாக இருக்கிறவிடத்து, பேணுதலானது, அவருடைய சொத்தினை அவர்கள் பெறக்கூடிய வீதப்படி பிரித்து அத்தகைய உறவினரால் செலுத்தத்தக்கதாகும்.

**5. (1). 4** ஆம் பிரிவின்படியான பேணுதலுக்கான விண்ணப்பம் ஒன்று,— பேணுதலுக்கான விண்ணப்பம்.

(அ) மூத்த குடிமகன் ஒருவரால் அல்லது, நேர்வுக்கேற்ப, பெற்றோர் ஒருவரால் செய்யப்படலாம்; அல்லது

(ஆ) மூத்த குடிமகன் ஆற்றல் குறைபாடுடையவராக இருப்பாராயின், அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற நபர் எவராலோ அல்லது அமைப்பாலோ செய்யப்படலாம்; அல்லது

(இ) தீர்ப்பாயம் தானே முற்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

**விளக்கம்.**— இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ‘‘அமைப்பு’’ என்பது, **1860** ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதன்படியும் பதிவு செய்யப்பட்ட தன்னார்வக்குழாம் என்று பொருள்படும். 21/1860.

**(2)** தீர்ப்பாயமானது, இந்தப் பிரிவின்படி பேணுதலுக்கான மாதாந்திர படித்தொகை குறித்த நடவடிக்கை நிலுவையில் இருக்கும்போது, பெற்றோர் உள்ளடங்கலாக அத்தகைய மூத்த குடிமகனின் இடைக்காலப் பேணுதலுக்காக மாதாந்திர படித்தொகை வழங்குவதற்கு அத்தகைய குழந்தைகள் அல்லது உறவினருக்கு ஆணையிடலாம் மற்றும் அதனை பெற்றோர் உள்ளடங்கலாக அத்தகைய மூத்த குடிமகனுக்கு, தீர்ப்பாயம் அவ்வப்போது பணிக்கிறவாறு செலுத்துதல் வேண்டும்.

**(3). (1)** ஆம் உட்பிரிவின்படி பேணுதலுக்கான விண்ணப்பத்தைப் பெறுவதன்பேரில், குழந்தைகள் அல்லது உறவினருக்கு விண்ணப்பத்தினைப் பற்றி அறிவிப்பு கொடுத்த பின்பும், தரப்பினர்களுக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பினைக் கொடுத்த பின்பும், பேணுகைத் தொகையை தீர்மானிப்பதற்காக விசாரணை ஒன்றைச்செய்தல் வேண்டும்.

**(4)** பேணுகைக்கான மாதாந்திர படித்தொகைக்கு மற்றும் நடவடிக்கைக்கான செலவினங்களுக்கு, **(2)**ஆம் உட்பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று, அத்தகைய நபருக்கு, விண்ணப்பத்தின் அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** தீர்ப்பாயமானது, எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக விதிவிலக்கான சூழ்நிலைகளில் முப்பது நாட்கள் மேல்வரைக் காலஅளவு ஒன்றிற்கு ஒருமுறை நீட்டிப்புச் செய்யலாம்.

(5) An application for maintenance under sub-section (1) may be filled against one or more persons:

Provided that such children or relative may implead the other person liable to maintain parent in the application for maintenance.

(6) Where a maintenance order was made against more than one person, the death of one of them does not affect the liability of others to continue paying maintenance.

(7) Any such allowance for the maintenance and expenses for proceeding shall be payable from the date of the order, or, if so ordered, from the date of the application for maintenance or expenses of proceeding, as the case may be.

(8) If, children or relative so ordered fail, without sufficient cause to comply with the order, any such Tribunal may, for every breach of the order, issue a warrant for levying the amount due in the manner provided for levying fines, and may sentence such person for the whole, or any part of each month's allowance for the maintenance and expenses of proceeding, as the case be, remaining unpaid after the execution of the warrant, to imprisonment for a term which may extend to one month or until payment if sooner made whichever is earlier:

Provided that no warrant shall be issued for the recovery of any amount due under this section unless application be made to the Tribunal to levy such amount within a period of three months from the date on which it became due.

Jurisdiction and procedure.

6. (1) The proceedings under section 5 may be taken against any children or relative in any district—

(a) where he resides or last resided; or

(b) where children or relative resides.

(5). (1) ஆம் உட்பிரிவின்படி பேணுதலுக்கான விண்ணப்பம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்படலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய குழந்தைகள் அல்லது உறவினர், பெற்றோரைப் பேணுதலுக்குக் கடப்பாடுடைய பிற நபரை பேணுதலுக்கான விண்ணப்பத்தில் சேர்க்கலாம்.

(6) ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு எதிராக பேணுதலுக்கு ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, அவர்களில் ஒருவரின் இறப்பு, பேணுதலைத் தொடர்ந்து செலுத்துவதற்கான மற்றவர்களின் கடப்பாட்டினைப் பாதிக்காது.

(7) பேணுதலுக்கான படித்தொகை மற்றும் நடவடிக்கைகள் செலவினங்கள் எவையும், ஆணையின் தேதியிலிருந்து அல்லது நேர்வுக்கேற்ப, அவ்வாறு ஆணையிடப்பட்டிருக்குமாயின், பேணுதலுக்கான அல்லது நடவடிக்கையின் செலவினங்களுக்காக விண்ணப்பம் செய்த தேதியிலிருந்து செலுத்ததக்கதாகும்.

(8) அவ்வாறு ஆணையிடப்பட்ட குழந்தைகள் அல்லது உறவினர் போதிய காரணம் இல்லாமல் ஆணைக்கு இணங்கத் தவறுவாராயின், அத்தகைய தீர்ப்பாயம் எதுவும், ஆணையின் மீறுகை ஒவ்வொன்றுக்கும், பணத் தண்டங்களை விதிப்பதற்கு வகை செய்யப்பட்ட முறையில் கொடுபட வேண்டிய தொகையினை வசூலிப்பதற்காக கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கலாம் மற்றும் அத்தகைய நபருக்கு, கட்டளை நிறைவேற்றப்பட்ட பின்பு செலுத்தப்படாமல் எஞ்சியிருக்கும், பேணுதலுக்கான ஒவ்வொரு மாதத்தின் படித்தொகை முழுவதற்குமாக அல்லது அதனின் பகுதிக்காக மற்றும் நேர்வுக்கேற்ப, நடவடிக்கைக்கான செலவினங்களுக்காக, ஒரு மாதம் வரை நீடிக்கலாகும் காலவரை ஒன்றிற்கு அல்லது செலுத்தம் முன்னதாகவே செய்யப்படும் வரையில், இதில் எது முந்தியதோ அதுவரையிலுள்ள காலவரை ஒன்றிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டனைத் தீர்ப்பு வழங்கலாம்:

**வரம்புரையாக:** இந்தப் பிரிவின்படி கொடுபட வேண்டிய தொகை எதனையும் வசூலிப்பதற்கான கட்டளை எதுவும், அது கொடுபடவேண்டியதான தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கால அளவு ஒன்றுக்குள், அத்தகைய தொகையினை வசூலிப்பதற்கு தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தாலன்றி பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

**6.** (1) 5 ஆம் பிரிவின்படியான நடவடிக்கைகள், குழந்தைகள் அல்லது உறவினர் எவருக்கும் எதிராக,— அதிகாரவரம்பு மற்றும் நெறிமுறை.

(அ) அவர் எந்த மாவட்டத்தில் குடியிருக்கிறாரோ அல்லது கடைசியாக குடியிருந்தாரோ; அல்லது

(ஆ) எந்த மாவட்டத்தில் குழந்தைகள் அல்லது உறவினர் குடியிருக்கின்றனரோ

அந்த மாவட்டத்தில் எடுக்கப்படலாம்.

(2) On receipt of the application under section 5, the Tribunal shall issues a process for procuring the presence of children or relative against whom the application is filed.

(3) For securing the attendance of children or relative the Tribunal shall have the power of a Judicial Magistrate of first class as provided under the Code of Criminal Procedure, 1973. 2/1974.

(4) All evidence to such proceedings shall be taken in the presence of the children or relative against whom an order for payment of maintenance is proposed to be made, and shall be recorded in the manner prescribed for summons cases:

Provided that if the Tribunal is satisfied that the children or relative against whom an order for payment of maintenance is proposed to be made is willfully avoiding service, or willfully neglecting to attend the Tribunal, the Tribunal may proceed to hear and determine the case *ex parte*.

(5) Where the children or relative is residing out of India, the summons shall be served by the Tribunal through such authority, as the Central Government may by notification in the official Gazette, specify in this behalf.

(6) The Tribunal before hearing an application under section 5 may, refer the same to a Conciliation Officer and such Conciliation Officer shall submit his findings within one month and if amicable settlement has been arrived at, the Tribunal shall pass an order to that effect.

*Explanation*.—For the purposes of this sub-section "Conciliation Officer" means any person or representative of an organisation referred to in *Explanation* to sub-section (1) of section 5 or the Maintenance Officers designated by the State Government under sub-section (1) of section 18 or any other person nominated by the Tribunal for this purpose.

**(2).** 5 ஆம் பிரிவின்படி விண்ணப்பத்தை பெறுவதன் பேரில் தீர்ப்பாயம், எந்தக் குழந்தைகள் அல்லது உறவினருக்கு எதிராக விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டதோ அந்தக் குழந்தைகள் அல்லது உறவினர் முன்னிலையாதலைப் பெறுவதற்கு நீதிமுறைக் கட்டளை ஒன்றை வழங்கவேண்டும்.

**(3)** குழந்தைகள் அல்லது உறவினர் முன்னிலையாகச் செய்வதற்கு தீர்ப்பாயமானது, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின்படி வகை செய்யப்பட்டுள்ளவாறான முதல் வகுப்பு குற்றவியல் நடுவரின் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

2/1974,

**(4)** அத்தகைய நடவடிக்கைகளுக்கான சான்று அனைத்தும், எந்தக் குழந்தைகள் அல்லது உறவினருக்கு எதிராக பேணுகையின் செலுத்தத்திற்கான ஆணை ஒன்று வழங்கப்படுவதற்குக் கருதப்பட்டுள்ளதோ அந்தக் குழந்தைகள் அல்லது உறவினரின் முன்னிலையில் எடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் அழைப்பாணை வழக்குகளுக்காக வகுத்துரைக்கப்பட்ட முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** தீர்ப்பாயம், எந்தக் குழந்தைகள் அல்லது உறவினருக்கு எதிராக பேணுகையின் செலுத்தத்திற்கான ஆணை ஒன்று வழங்கப்படுவதற்குக் கருதப்பட்டுள்ளதோ அந்தக் குழந்தைகள் அல்லது உறவினர் வேண்டுமென்றே சார்வு செய்யப்படுதலை தவிர்ப்பதாக அல்லது தீர்ப்பாயத்திற்கு வருகை தருவதற்கு வேண்டுமென்றே அசட்டையாக இருப்பதாகத் தெளிவுறக் காணுமாயின் தீர்ப்பாயமானது, தரப்பினரின்றி விசாரித்து தீர்மானிப்பதற்கு முற்படலாம்.

**(5)** குழந்தைகள் அல்லது உறவினர் இந்தியாவிற்கு வெளியே குடியிருக்கிறவிடத்து, அழைப்பாணை, இதற்கென மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் அத்தகைய அதிகார அமைப்பின் வாயிலாக தீர்ப்பாயத்தால் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

**(6)** தீர்ப்பாயம், 5 ஆம் பிரிவின்படி விண்ணப்பம் ஒன்றை விசாரிப்பதற்கு முன்பு, அதை இணக்க அலுவலருக்கு குறித்தனுப்பலாம் மற்றும் அத்தகைய இணக்க அலுவலர் அவருடைய முடிவுகளை ஒரு மாதத்திற்குள் அனுப்பி வைத்தல் வேண்டும் மற்றும் இணக்கமான தீர்வு எய்தப்பட்டிருக்குமாயின், தீர்ப்பாயம், அந்தப் படிக்கு ஆணை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

**விளக்கம்.—** இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "இணக்க அலுவலர்" என்பது, 5ஆம் பிரிவின் **(1)**ஆம் உட்பிரிவிற்கான விளக்கத்தில் சுட்டப்பட்டுள்ள நபர் அல்லது அமைப்பு ஒன்றின் சார்பாற்றுநர் அல்லது 18 ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி மாநில அரசால் பெயர்க்குறித்தமர்த்தப்பட்ட பேணுகை அலுவலர்கள் அல்லது இந்த நோக்கத்திற்காக தீர்ப்பாயத்தால் நியமனஞ்செய்யப்பட்ட பிற நபர் எவரும் என்று பொருள்படும்.

Constitution of Maintenance Tribunal.

7. (1) The State Government shall within a period of six months from the date of the commencement of this Act, by notification in Official Gazette, constitute for each Sub-division one or more Tribunals as may be specified in the notification for the purpose of adjudicating and deciding upon the order for maintenance under section 5.

(2) The Tribunal shall be presided over by an officer not below the rank of Sub- Divisional Officer of a State.

(3) Where two or more Tribunals are constituted for any area, the State Government may, by general or special order, regulate the distribution of business among them.

Summary procedure in case of inquiry.

8. (1) In holding any inquiry under section 5, the Tribunal may, subject to any rules that may be prescribed by the State Government in this behalf, follow such summary procedure as it deems fit.

(2) The Tribunal shall have all the powers of a Civil Court for the purpose of taking evidence on oath and of enforcing the attendance of witnesses and of compelling the discovery and production of documents and material objects and for such other purposes as may be prescribed; and the Tribunal shall be deemed to be a Civil Court for all the purposes of section 195 and Chapter XXVI of the Code of Criminal Procedure, 1973. 2/1974.

(3) Subject to any rule that may be made in this behalf, the Tribunal may, for the purpose of adjudicating and deciding upon any claim for maintenance, choose one or more persons possessing special knowledge of any matter relevant to the inquiry to assist it in holding the inquiry.

Order for maintenance.

9. (1) If children or relatives, as the case may be, neglect or refuse to maintain a senior citizen being unable to maintain himself, the Tribunal may, on being satisfied of such neglect or refusal, order such children or relatives to make a monthly allowance at such monthly rate for the maintenance of such senior citizen, as the Tribunal may deem fit and to pay the same to such senior citizen as the Tribunal may, from time to time, direct.

**7. (1)** மாநில அரசு, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கால அளவிற்குள் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக 5 ஆம் பிரிவின்படியான பேணுகைக்கான ஆணையின் பேரில் நீதிமுறையில் தீர்மானிக்கும் மற்றும் முடிபு செய்யும் நோக்கத்திற்காக, அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்ப்பாயங்களை உட்கோட்டம் ஒவ்வொன்றிற்காகவும் அமைத்தல் வேண்டும். பேணுகைத் தீர்ப்பாயத்தை அமைத்தல்.

(2) தீர்ப்பாயமானது, மாநிலம் ஒன்றின் உட்கோட்ட அலுவலர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவரால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும்.

(3) வரையிடம் எதற்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தீர்ப்பாயங்கள் அமைக்கப்படுகிறவிடத்து, மாநில அரசு, பொது அல்லது தனியுறு ஆணையின் வாயிலாக அவர்களுக்கிடையேயான அலுவற்பணிகளின் பகிர்ந்தளிப்பை முறைப்படுத்தலாம்.

**8. (1)** 5 ஆம் பிரிவின்படி விசாரணை எதனையும் நடத்துகையில், தீர்ப்பாயமானது, இதற்கென மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் விதிகள் எவற்றிற்கும் உட்பட்டு அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய சுருக்குமுறை நெறிமுறையைப் பின்பற்றலாம். விசாரணையின் நேர்வில் சுருக்குமுறை நெறிமுறை.

(2) தீர்ப்பாயம், ஆணைமொழியின் பேரில் சான்று எடுத்தல் மற்றும் சாட்சிகள் முன்னிலையாவதை செயலுறுத்தல் மற்றும் ஆவணங்களையும் முக்கிய சான்றுப் பொருள்களையும் வெளிக்கொணர்தல் மற்றும் தாக்கல் செய்தலைக் கட்டாயப்படுத்தும் நோக்கங்களுக்காகவும், வகுத்துரைக்கப்படலாகும் பிற நோக்கங்களுக்காகவும் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின் அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டிருக்கும்; மற்றும் தீர்ப்பாயம்
2/1974. 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 195 ஆம் பிரிவின் மற்றும் XXVI ஆம் அத்தியாயத்தின் நோக்கங்கள் அனைத்திற்காகவும் உரிமையியல் நீதிமன்றம் ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இதற்கென செய்யப்படலாகும் விதி எதற்கும் உட்பட்டு தீர்ப்பாயமானது பேணுதலுக்கான கோருரிமை எதன்பேரிலும் நீதிமுறையில் தீர்மானிக்கும் மற்றும் முடிபு செய்யும் நோக்கத்திற்காக, விசாரணை நடத்துகையில் அதற்கு உதவி செய்வதற்கு, விசாரணை தொடர்பான பொருட்பாடு எதிலும் தனியுறு பட்டறிவு கொண்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைத் தெரிவு செய்யலாம்.

**9. (1)** குழந்தைகள் அல்லது நேர்வுக்கேற்ப உறவினர்கள், தன்னைத்தானே பேணிக் கொள்வதற்கு முடியாதவராயிருக்கிற மூத்த குடிமகன் ஒருவரைப் பேணுவதற்கு அசட்டை செய்வாராயின் அல்லது மறுப்பாராயின், தீர்ப்பாயம், அத்தகைய அசட்டை அல்லது மறுப்பினை தெளிவுறக் காண்பதன்பேரில் அத்தகைய மூத்த குடிமகனின் பேணுகைக்காக மாதாந்திர வீதத்தில் தீர்ப்பாயம் பொருத்தமெனக் கருதும் மாதாந்திர படித்தொகையினை செலுத்துவதற்கு அத்தகைய குழந்தைகள் அல்லது உறவினர்களுக்கு ஆணையிடலாம் மற்றும் அதனை அத்தகைய மூத்த குடிமகனுக்கு தீர்ப்பாயம் அவ்வப்போது பணிக்கலாகிறவாறு செலுத்துதல் வேண்டும். பேணுதலுக்கான ஆணை.

(2) The maximum maintenance allowance which may be ordered by such Tribunal shall be such as may be prescribed by the State Government which shall not exceed ten thousand rupees per month.

Alteration in allowance.

10. (1) On proof of misrepresentation or mistake of fact or a change in the circumstances of any person, receiving a monthly allowance under section 9, for the maintenance ordered under that section to pay a monthly allowance for the maintenance, the Tribunal may make such alteration, as it thinks fit, in the allowance for the maintenance.

(*2*) Where it appears to the Tribunal that, in consequence of any decision of a competent Civil Court, any order made under section 9 should be cancelled or varied, it shall cancel the order or, as the case may be, vary the same accordingly.

Enforcement of order of maintenance.

11. (1) A copy of the order of maintenance and including the order regarding expenses of proceedings, as the case may be, shall be given without payment of any fee to the senior citizen or to parent, as the case may be, in whose favour it is made and such order may be enforced by any Tribunal in any place where the person against whom it is made, such Tribunal on being satisfied as to the identity of the parties and the non-payment of the allowance, or as the case may be, expenses, due.

(*2*) A maintenance order made under this Act shall have the same force and effect as an order passed under Chapter IX of the Code of Criminal Procedure, 1973 and shall be executed in the manner prescribed for the execution of such order by that Code. 2/1974.

Option regarding maintenance in certain cases.

12. Notwithstanding anything contained in Chapter IX of the Code of Criminal Procedure 1973 where a senior citizen or a parent is entitled for maintenance under the said Chapter and also entitled for maintenance under this Act may, without prejudice to the provisions of Chapter IX of the said Code, claim such maintenance under either of those Acts but not under both. 2/1974.

(2) அத்தகைய தீர்ப்பாயத்தால் ஆணையிடப்படலாகும் பெரும் அளவு பேணுகைப் படித்தொகை, மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும், அது மாதம் ஒன்றிற்குப் பத்தாயிரம் ரூபாய்க்கு மிகையாதல் ஆகாது.

**10. (1). 9** ஆம் பிரிவின்படி மாதாந்திர படித்தொகை ஒன்றைப் பெற்று வருகிற நபர் எவரின், திரித்துக் காட்டுதலின் அல்லது பொருண்மை தவறின் அல்லது சூழ்நிலைகளின் மாற்றம் ஒன்றின் மெய்ப்பிப்பின்பேரில், பேணுதலுக்கான மாதாந்திர படித்தொகை ஒன்றை வழங்குவதற்கு அந்தப் பிரிவின்படி ஆணையிடப்பட்ட பேணுகைக்கான தீர்ப்பாயம், பேணுதலுக்கான படித்தொகையில், அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய மாற்றத்தைச் செய்யலாம். படித்தொகையில் மாற்றம் செய்தல்.

(2). 9 ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும், தகுதிறம் வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தின் முடிபு எதனின் விளைவால் அறவு செய்யப்படுதல் அல்லது மாறுதல் செய்யப்படுதல் வேண்டுமென தீர்ப்பாயத்திற்கு தோன்றுகிறவிடத்து, அதற்கிணங்க அது, ஆணைய அறவு செய்தல் அல்லது நேர்வுக்கேற்ப, மாறுதல் செய்தல் வேண்டும்.

**11.** (1) பேணுதலுக்கான ஆணை மற்றும் நேர்வுக்கேற்ப, நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் குறித்த ஆணை உள்ளடங்கலாக, அது எந்த மூத்த குடிமகன் அல்லது நேர்வுக்கேற்ப, பெற்றோர் சார்பாக வழங்கப்பட்டதோ அந்த மூத்த குடிமகன் அல்லது நேர்வுக்கேற்ப, பெற்றோருக்கு கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியது இல்லாமல் வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய ஆணை எந்த நபருக்கு எதிராக இயற்றப்பட்டதோ அந்த நபர் இருக்கிற இடம் எதிலுமுள்ள தீர்ப்பாயம் எதனாலும், அத்தகைய தீர்ப்பாயம் தரப்பினர்களின் அடையாளம் மற்றும் கொடுபட வேண்டிய படித்தொகை அல்லது நேர்வுக்கேற்ப, செலவினங்களைச் செலுத்தாமை குறித்து தெளிவுறக் காண்பதன்பேரில் நிறைவேற்றப்படலாம். பேணுதலுக்கான ஆணையை நிறைவேற்றுதல்.

(2) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட பேணுதலுக்கான
2/1974. ஆணை ஒன்று, **1973** ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின் IX ஆம் அத்தியாயத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றைப் போன்றே அதே செல்லாற்றலையும் செல்திறத்தையும் கொண்டிருக்கும் மற்றும் அந்தத் தொகுப்புச் சட்டத்தினால் அத்தகைய ஆணை நிறைவேற்றப்படுவதற்காக வகுத்துரைக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

2/1974. **12. 1973** ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின் IX ஆம் அத்தியாயத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மூத்த குடிமகன் அல்லது பெற்றோர் ஒருவர் கூறப்பட்ட அத்தியாயத்தின்படி பேணுதலுக்காக உரிமை கொண்டிருக்கிறவிடத்தும், இந்தச் சட்டத்தின்படி பேணுதலுக்கான உரிமை கொண்டிருக்கிறவிடத்தும்கூட கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் IX ஆம் அத்தியாயத்தின் வகையங்களுக்கு குந்தகமின்றி அத்தகைய பேணுகையினை, அவ்விரண்டு சட்டங்களில் ஏதொன்றின்படியும் கோருரிமை செய்யலாம், ஆனால், அவ்விரண்டு சட்டங்களின்படியும் அன்று. குறித்தசில நேர்வுகளில் பேணுதல் குறித்த விருப்பத் தேர்வு.

Deposit of maintenance amount.

13. When an order is made under this Chapter, the children or relative who is required to pay any amount in terms of such order shall within thirty days of the date of announcing the order by the Tribunal, deposit the entire amount ordered in such manner as the Tribunal may direct.

Award of interest where any claim is allowed.

14. Where any Tribunal makes an order for maintenance made under this Act, such Tribunal may direct that in addition to the amount of maintenance, simple interest shall also be paid at such rate and from such date not earlier than the date of making the application as may be determined by the Tribunal which shall not be less than five per cent. and not more than eighteen per cent.:

Provided that where any application for maintenance under Chapter IX of the Code of Criminal Procedure, 1973 is pending before a Court at the commencement of this Act, then the Court shall allow the withdrawal of such application on the request of the parent and such parent shall be entitled to file an application for maintenance before the Tribunal. 2/1974.

Constitution of Appellate Tribunal.

15. (1) The State Government may, by notification in the Official Gazette, constitute one Appellate Tribunal for each district to hear the appeal against the order of the Tribunal.

(2) The Appellate Tribunal shall be presided over by an officer not below the rank of District Magistrate.

Appeals.

16. (1) Any senior citizen or a parent, as the case may be, aggrieved by an order of a Tribunal may, within sixty days from the date of the order, prefer an appeal to the Appellate Tribunal:

Provided that on appeal, the children or relative who is required to pay any amount in terms of such maintenance order shall continue to pay to such parent the amount so ordered, in the manner directed by the Appellate Tribunal:

Provided further that the Appellate Tribunal may, entertain the appeal after the expiry of the said period of sixty days, if it is satisfied that the appellant was prevented by sufficient cause from preferring the appeal in time.

**13.** இந்த அத்தியாயத்தின்படி ஆணை ஒன்று பிறப்பிக்கப்படுகிறபோது, அத்தகைய ஆணையின் வரையுரைகளில் தொகை எதனையும் செலுத்துவதற்கு வேண்டுறுத்தப்பட்டிருக்கிற குழந்தைகள் அல்லது உறவினர் தீர்ப்பாயத்தினால் ஆணை அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், தீர்ப்பாயம் பணிக்கலாகும் அத்தகைய முறையில் ஆணையிடப்பட்ட முழுத் தொகையையும் வைப்பீடு செய்தல் வேண்டும். பேணுகைத் தொகையை வைப்பீடு செய்தல்.

**14.** இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட பேணுதலுக்கான ஆணை ஒன்றினை, தீர்ப்பாயம் எதுவும் பிறப்பிக்கிறவிடத்து, அத்தகைய தீர்ப்பாயமானது, பேணுதலுக்கான தொகைக்குக் கூடுதலாக தீர்ப்பாயத்தினால் தீர்மானிக்கப்படலாகும் தனிவட்டியினை அத்தகைய வீதத்திலும் விண்ணப்பம் செய்த தேதிக்கு முன்னதாக இல்லாத அத்தகைய தேதியிலிருந்தும் செலுத்தப்படுதல் வேண்டும் என்று பணிக்கலாம், அது ஐந்து விழுக்காட்டிற்கு குறையாமலும் பதினெட்டு விழுக்காட்டிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்: கோருரிமை எதுவும் ஏற்றுக் கொள்ளப்படுகிற விடத்து வட்டியை விதித்தல்.

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் தொடக்கத்தின்போது, நீதிமன்றம் ஒன்றின் முன்பு, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின் IX ஆம் அத்தியாயத்தின்படி பேணுதலுக்கான விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இருக்கிறவிடத்து, நீதிமன்றம் பெற்றோரின் வேண்டுகோளின்பேரில் அத்தகைய விண்ணப்பத்தை திரும்பப் பெறுவதற்கு அனுமதித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய பெற்றோர் பேணுதலுக்கான விண்ணப்பம் ஒன்றை தீர்ப்பாயத்தின் முன்பு தாக்கல் செய்வதற்கு உரிமை கொண்டவர் ஆவார். 2/1974.

**15. (1)** மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, தீர்ப்பாயத்தின் ஆணைக்கு எதிராக மேல்முறையீட்டை விசாரிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை அமைக்கலாம். மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை அமைத்தல்.

(2) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, மாவட்ட குற்றவியல் நடுவரின் படிநிலைக்கு குறையாத அலுவலர் ஒருவரால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும்.

**16. (1)** தீர்ப்பாயத்தின் ஆணை ஒன்றினால் குறையுற்ற மூத்த குடிமகன் அல்லது நேர்வுக்கேற்ப, பெற்றோர் எவரும், ஆணையின் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்யலாம்: மேல்முறையீடுகள்.

**வரம்புரையாக:** மேல்முறையீட்டின்பேரில் அத்தகைய பேணுதல் ஆணையின் வரையுரைகளில் தொகை எதனையும் செலுத்துவதற்கு வேண்டுறுத்தப்பட்ட குழந்தைகள் அல்லது உறவினர் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தால் பணிக்கப்பட்ட முறையில், அவ்வாறு ஆணையிடப்பட்ட தொகையினை அத்தகைய பெற்றோருக்கு தொடர்ந்து செலுத்துதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, மேல்முறையீட்டாளர், குறிப்பிட்ட காலத்திற்குள் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதிலிருந்து போதுமான காரணங்களினால் தடுக்கப்பட்டாரென தெளிவுறக் காணுமாயின், கூறப்பட்ட அறுபது நாட்கள் காலஅளவு கழிவுற்ற பின்பும் மேல்முறையீட்டை ஏற்றுக் கொள்ளலாம்.

(2) On receipt of an appeal, the Appellate Tribunal shall, cause a notice to be served upon the respondent.

(3) The Appellate Tribunal may call for the record of proceedings from the Tribunal against whose order the appeal is preferred.

(4) The Appellate Tribunal may, after examining the appeal and the records called for either allow or reject the appeal.

(5) The Appellate Tribunal shall, adjudicate and decide upon the appeal filed against the order of the Tribunal and the order of the Appellate Tribunal shall be final:

Provided that no appeal shall be rejected unless an opportunity has been given to both the parties of being heard in person or through a dully authorised representative.

(6) The Appellate Tribunal shall make an endeavour to pronounce its order in writing within one month of the receipt of an appeal.

(7) A copy of every order made under sub-section (*5*) shall be sent to both the parties free of cost.

Right to legal representation.

17. Notwithstanding anything contained in any law, no party to a proceeding before a Tribunal or Appellate Tribunal shall be represented by a legal practitioner.

Maintenance Officer.

18. (1) The State Government shall designate the District Social Welfare or an officer not below the rank of a District Social Welfare Officer, by whatever name called as Maintenance Officer.

(2) The Maintenance Officer referred to in sub-section (1), shall represent a parent if he so desires, during the proceedings of the Tribunal, or the Appellate Tribunal, as the case may be.

(2) மேல்முறையீடு ஒன்றைப் பெறுவதன்பேரில், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, பிரதிவாதிக்கு அறிவிப்பு ஒன்று சார்வு செய்யப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

(3) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, எந்தத் தீர்ப்பாயத்தின் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதோ அந்தத் தீர்ப்பாயத்திடமிருந்து நடவடிக்கைகள் தொடர்பான பதிவணத்தினைத் தருவிக்கலாம்.

(4) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, மேல்முறையீட்டையும், தருவிக்கப்பட்ட பதிவணங்களையும் ஆய்வு செய்தபின்பு, மேல்முறையீட்டை ஏற்கலாம் அல்லது ஏற்க மறுக்கலாம்.

(5) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, தீர்ப்பாயத்தின் ஆணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டின் பேரில் நீதிமுறையில் தீர்மானித்தலும் முடிபு செய்தலும் வேண்டும் மற்றும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் ஆணையானது அறுதியானதாகும்:

**வரம்புரையாக:** மேல்முறையீடு எதுவும், இரண்டு தரப்பினர்களுக்கும் நேரடியாக அல்லது உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட சார்பாற்றுநர் ஒருவர் வாயிலாக, கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்பட்டிருந்தாலன்றி, ஏற்க மறுக்கப்படுதல் ஆகாது.

(6) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமானது, மேல்முறையீடு ஒன்றை பெற்றுக்கொண்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள் அதனுடைய ஆணையை எழுத்து வடிவில் பகர்வதற்கு பெருமுயற்சி செய்தல் வேண்டும்.

(7). (5) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றின் படியொன்று, இரண்டு தரப்பினர்களுக்கும் கட்டணமில்லாமல் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

சட்ட சார்பாற்றம் செய்வதற்கான உரிமை.

17. பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், தீர்ப்பாயத்தின் அல்லது மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன்புள்ள நடவடிக்கை ஒன்றின் தரப்பினர் எவரும், சட்டத் தொழிலாற்றுநர் ஒருவரால் சார்பாற்றம் செய்யப்படுதல் ஆகாது.

பேணுகை அலுவலர்.

18. (1) மாநில அரசு, எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் மாவட்ட சமூக நல அலுவலரை அல்லது மாவட்ட சமூக நல அலுவலர் ஒருவரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவரை பேணுகை அலுவலராக பெயர் குறித்து அமர்த்துதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட பேணுகை அலுவலர், தீர்ப்பாயத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் நடவடிக்கையின்போது பெற்றோர் ஒருவரை, அவர் அவ்வாறு விரும்புவாராயின், சார்பாற்றம் செய்தல் வேண்டும்.

## CHAPTER III

### ESTABLISHMENT OF OLDAGE HOMES

Establishment of oldage homes.

19. (1) The State Government may establish and maintain such number of oldage homes at accessible places, as it may deem necessary, in a phased manner, beginning with at least one in each district to accommodate in such homes a minimum of one hundred fifty senior citizens who are indigent.

(*2*) The State Government may, prescribe a scheme for management of old age homes, including the standards and various types of services to be provided by them which are necessary for medical care and means of entertainment to the inhabitants of such homes.

*Explanation*.—For the purposes of this section, "indigent" means any senior citizen who is not having sufficient means, as determined by the State Government, from time to time, to maintain himself.

## CHAPTER IV

### PROVISIONS FOR MEDICAL CARE OF SENIOR CITIZEN

Medical support for senior citizens.

20. The State Government shall ensure that,—

(i) the Government hospitals or hospitals funded fully or partially by the Government shall provide beds for all senior citizens as far as possible;

(ii) separate queues be arranged for senior citizens;

(iii) facility for treatment of chronic, terminal and degenerative diseases is expanded for senior citizens;

(iv) research activities for chronic elderly diseases and ageing expanded;

## அத்தியாயம் III

### முதியோர் இல்லங்களை நிறுவுதல்

**19. (1)** மாநில அரசு, எளிதில் அணுகத்தக்க இடங்களில் அது தேவையெனக் கருதலாகும் அத்தகைய எண்ணிக்கையிலான முதியோர் இல்லங்களை ஏழ்மைநிலையில் உள்ள நூற்று ஐம்பது மூத்த குடிமக்கள் தங்கும் வசதியுடைய இல்லங்களை ஆரம்பத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது ஒன்று என்ற படிநிலை முறையில் நிறுவலாம் மற்றும் பேணி வரலாம். முதியோர் இல்லங்களை நிறுவுதல்.

**(2)** மாநில அரசு, முதியோர் இல்லங்களை மேலாண்மை செய்வதற்காக, அத்தகைய இல்லங்களின் தரநிலைகள் மற்றும் குடியிருப்பவர்களுக்கு மருத்துவ கவனிப்பு மற்றும் பொழுதுபோக்கு வழிவகைகளுக்குத் தேவைப்படுகிற, அவற்றால் வகை செய்யப்பட வேண்டிய பல்வேறு வகைகளிலான பணிகள் உள்ளடங்கலாக திட்டம் ஒன்றை வகுத்துரைக்கலாம்.

**விளக்கம்.—** இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ''ஏழ்மை நிலையில் உள்ள'' என்பது, எந்த மூத்த குடிமகன், தன்னைத்தானே பேணிக்கொள்வதற்கு, மாநில அரசால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகிற போதுமான வருவாயைக் கொண்டிராதவராக இருக்கிறாரோ அந்த மூத்த குடிமகன் எவரும் என்று பொருள்படும்.

## அத்தியாயம் IV

### மூத்த குடிமகனின் மருத்துவ கவனிப்பிற்கான வகையங்கள்

**20.** மாநில அரசானது,— மூத்த குடிமகனுக்கான மருத்துவ உதவி.

(i) அரசு மருத்துவமனைகளில் அல்லது அரசால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிதியுதவி அளிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளில் இயன்ற அளவு மூத்த குடிமக்கள் அனைவருக்கும் படுக்கை வசதிகளுக்கு வகை செய்தலை;

(ii) மூத்த குடிமக்களுக்காக தனிவரிசை ஏற்பாடு செய்யப்படுதலை;

(iii) மூத்த குடிமக்களுக்காக நாட்பட்ட, இறப்பின் இறுதி கட்டத்திலுள்ள மற்றும் சீர்கேடுற்றவராக்குகிற நோய்களின் சிகிச்சைக்கான வசதி விரிவுபடுத்தப்படுதலை;

(iv) நாட்பட்ட மற்றும் முற்றிய நோய்கள் மற்றும் முதுமைபடுதலுக்கான ஆராய்ச்சி செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படுதலை;

(v) there are earmarked facilities for geriatric patients in every district hospital dully headed by a medical officer with experience in geriatric care.

## CHAPTER V

### PROTECTION OF LIFE AND PROPERTY OF SENIOR CITIZEN

Measures for publicity, awareness, etc., for welfare of senior citizens.

21. The State Government shall, take all measures to ensure that—

(i) the provisions of this Act are given wide publicity through public media including the television, radio and the print, at regular intervals;

(ii) the Central Government and State Government Officers, including the police officers and the members of the judicial service, are given periodic sensitization and awareness training on the issues relating to this Act;

(iii) effective co-ordination between the services provided by the concerned Ministries or Departments dealing with law, home affairs, health and welfare, to address the issues relating to the welfare of the senior citizens and periodical review of the same is conducted.

Authorities who may be specified for implementing the provisions of this Act.

22. (1) The State Government may, confer such powers and impose such duties on a District Magistrate as may be necessary, to ensure that the provisions of this Act are properly carried out and the District Magistrate may specify the officer, subordinate to him, who shall exercise all or any of the powers, and perform all or any of the duties, so conferred or imposed and the local limits within which such powers or duties shall be carried out by the officer as may be prescribed.

(v) மாவட்ட மருத்துவமனை ஒவ்வொன்றிலும் மூப்புக்குரிய நோயாளிகளுக்காக மூப்பியல் மருத்துவ கவனிப்பில் பட்டறிவு கொண்டுள்ள மருத்துவ அலுவலர் ஒருவரால் உரியவாறு தலைமை வகிக்கப்பட்டு ஒதுக்கீட்டு வசதிகள் இருக்கின்றன என்பதை

உறுதி செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் V

### மூத்த குடிமகனின் உயிர் மற்றும் சொத்துக்கான பாதுகாப்பு

**21.** மாநில அரசானது,— மூத்த குடிமகனின் நல்வாழ்விற்காக விளம்பரம், விழிப்புணர்வு முதலிய– வற்றிற்கான நடவடிக்கை.

(i) இந்தச் சட்டத்தின் வகையங்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் அச்சிடுதல் உள்ளடங்கலாக, பொது ஊடகத்தின் வாயிலாக உரிய இடைவெளிகளில் பரவலாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது;

(ii) இந்தச் சட்டம் தொடர்பான செயல்முறைகளின் பேரில், காவல்துறை அலுவலர்கள் மற்றும் நீதித்துறைப் பணியின் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக மைய அரசு மற்றும் மாநில அரசின் அலுவலர்களுக்கு காலமுறைகளில் திறநுட்பம்பெருக்கு மற்றும் விழிப்புணர்வு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது;

(iii) மூத்த குடிமக்களின் நல்வாழ்வு தொடர்பான செயல்முறைகளில் ஈடுபடுத்திக்கொள்வதற்கு, சட்டம், உள்துறை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு தொடர்புடைய அமைச்சகங்கள் அல்லது துறைகளினால் வழங்கப்பட்ட பணிகளுக்கிடையே திறம்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் அது காலமுறைகளில் மறுஆய்வு செய்யப்படுகிறது

என்பதை உறுதி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

**22. (1)** மாநில அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்கள் முறையாக செயற்படுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்கு மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவருக்கு, தேவைப்படலாகும் அதிகாரங்களை வழங்கலாம் மற்றும் கடமைகளை விதிக்கலாம் மற்றும் மாவட்ட குற்றவியல் நடுவர், அவருக்குக் கீழமையில் உள்ள எந்த அலுவலர் அவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் செலுத்துதல் வேண்டுமோ மற்றும் அவ்வாறு விதிக்கப்பட்ட கடமைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் புரிதல் வேண்டுமோ அந்த அலுவலரையும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் எந்த வட்டார எல்லைகளுக்குள் அத்தகைய அதிகாரங்கள் அல்லது கடமைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ அந்த வட்டார எல்லைகளையும் குறித்துரைக்கலாம். இந்தச் சட்டத்தின் வகையங்களை செயற்படுத்து– வதற்கு குறித்துரைக்– கப்படலாகும் அதிகார அமைப்புகள்.

(2) The State Government shall prescribe a comprehensive action plan for providing protection of life and property of senior citizens.

Transfer of property to be void in certain circumstances.

23. (1) Where any senior citizen who, after the commencement of this Act, has transferred by way of gift or otherwise, his property, subject to the condition that the transferee shall provide the basic amenities and basic physical needs to the transferor and such transferee refuses or fails to provide such amenities and physical needs, the said transfer of property shall be deemed to have been made by fraud or coercion or under undue influence and shall at the option of the transferor be declared void by the Tribunal.

(2) Where any senior citizen has a right to receive maintenance out of an estate and such estate or part thereof is transferred, the right to receive maintenance may be enforced against the transferee if the transferee has notice of the right, or if the transfer is gratuitous; but not against the transferee for consideration and without notice of right.

(3) If, any senior citizen is incapable of enforcing the rights under sub-sections (1) and (*2*), action may be taken on his behalf by any of the organisation referred to in *Explanation* to sub-section (1) of section 5.

## CHAPTER VI

### OFFENCES AND PROCEDURE FOR TRIAL

Exposure and abandonment of senior citizen.

24. Whoever, having the care or protection of senior citizen leaves, such senior citizen in any place with the intention of wholly abandoning such senior citizen, shall be punishable with imprisonment of either description for a term which may extend to three months or fine which may extend to five thousands rupees or with both.

Cognizance of offences.

25. (1) Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973, every offence under this Act shall be cognizable and bailable. 2/1974.

(2) மாநில அரசானது, மூத்த குடிமக்களின் உயிர் மற்றும் சொத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக விரிவான செயல்திட்டத்தையும் வகுத்துரைத்தல் வேண்டும்.

23. (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு பின்பு, மூத்த குடிமகன் எவரும், அவருடைய சொத்தினை கொடை வாயிலாக அல்லது பிறவாறாக உரிமை மாற்றம் பெறுநர், உரிமைமாற்றம் செய்பவருக்கு அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படை உடல்சார்ந்த தேவைகளை வழங்குதல் வேண்டும் என்ற வரைக்கட்டிற்கு உட்பட்டு, உரிமை மாற்றம் செய்கிறவிடத்து, அத்தகைய உரிமை மாற்றம் பெறுநர், அத்தகைய வசதிகளை மற்றும் உடல்சார்ந்த தேவைகளை வழங்குவதற்கு மறுக்கிறவிடத்து அல்லது தவறுகிறவிடத்து, கூறப்பட்ட சொத்துரிமை மாற்றமானது, மோசடி அல்லது வலுக்கட்டாயமாக அல்லது தகாநிலை வற்புறுத்தம் வாயிலாக செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் உரிமைமாற்றம் செய்பவரின் விருப்பத் தேர்வின்படி தீர்ப்பாயத்தால் இல்லா நிலையதாக விளம்புகை செய்யப்படுதல் வேண்டும். குறித்தசில சூழ்நிலைகளில் சொத்தின் உரிமைமாற்றம் இல்லா நிலையதாக இருத்தல்.

(2) மூத்த குடிமகன் எவரும், இறங்கு சொத்து ஒன்றிலிருந்து பேணுதல் பெறுவதற்கு உரிமை கொண்டிருக்கிறவிடத்து மற்றும் அத்தகைய இறங்கு சொத்து அல்லது அதனின் பகுதி உரிமைமாற்றம் செய்யப்படுகிறவிடத்து, பேணுதல் பெறுவதற்கான உரிமை, உரிமை மாற்றம் பெறுநர் முன்னறிவிப்பிற்கான உரிமை கொண்டிருப்பாராயின் அல்லது உரிமைமாற்றம் நன்கொடையாக இருப்பின், உரிமைமாற்றம் பெறுநருக்கு எதிராக செயலுறுத்தப்படலாம். ஆனால், மறுபயனுக்காக மற்றும் முன்னறிவிப்பிற்கான உரிமை இல்லாத உரிமை மாற்றம் பெறுநருக்கு எதிராக அன்று.

(3) மூத்த குடிமகன் எவரும், (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்படி உரிமைகளை செயலுறுத்த இயலாதவராக இருப்பின், 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் விளக்கத்தில் சுட்டப்பட்டுள்ள அமைப்பு எதனாலும் அவருடைய சார்பாக நடவடிக்கை எடுக்கப்படலாம்.

## அத்தியாயம் VI

### குற்றச்செயல்கள் மற்றும் விசாரணைக்கான நெறிமுறை

24. மூத்த குடிமகனை கவனிப்பில் அல்லது பாதுகாப்பில் வைத்துள்ள எவராகிலும், மூத்த குடிமகனை முழுமையாக கைவிட்டுவிட வேண்டும் என்ற உட்கருத்துடன் ஏதேனும் இடத்தில் அத்தகைய மூத்த குடிமகனை விட்டு விட்டுச் செல்வாராயின், மூன்று மாதங்கள் வரை நீட்டிக்கலாகும் காலவரை ஒன்றிற்குச் சிறைத்தண்டனையோ அல்லது ஐயாயிரம் ரூபாய்வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். மூத்த குடிமகனின் இடர் காப்பின்மை மற்றும் அவரை கைவிடுதல்.

2/1974. 25. (1) 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறை தொகுப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒவ்வொன்றும் கைது செய்தற்குரியதும், பிணையத்தில் விடத்தக்கதுமாகும். குற்றச் செயல்களை விசாரணை செய்தல்.

(*2*) An offence under this Act shall be tried summarily by a Magistrate.

## CHAPTER VII
### MISCELLANEOUS

Officers to be public servants.

26. Every officer or staff appointed to exercise functions under this Act shall be deemed to be a public servant within the meaning of section 21 of the Indian Penal Code. 45/1860.

Jurisdiction of civil courts barred.

27. No Civil Court shall have jurisdiction in respect of any matter to which any provision of this Act applies and no injunction shall be granted by any Civil Court in respect of anything which is done or intended to be done by or under this Act.

Protection of action taken in good faith.

28. No suit, prosecution or other legal proceeding shall lie against the Central Government, the State Governments or the local authority or any officer of the Government in respect of anything which is done in good faith or intended to be done in pursuance of this Act and any rules or orders made thereunder.

Power to remove difficulties.

29. If any difficulty arises in giving effect to the provisions of this Act, the State Government may, by order published in the Official Gazette, make such provisions not inconsistent with the provisions of this Act, as appear to it to be necessary or expedient for removing the difficulty:

Provided that no such order shall be made after the expiry of a period of two years from the date of the commencement of this Act.

Power of Central Government to give directions.

30. The Central Government may give directions to State Governments as to the carrying into execution of the provisions of this Act.

Power of Central Government to review.

31. The Central Government may make periodic review and monitor the progress of the implementation of the provisions of this Act by the State Governments.

Power of State Government to make rules.

32. (1) The State Government may, by notification in the Official Gazette, make rules for carrying out the purposes of this Act.

**(2)** இந்தச் சட்டத்தின்படியான குற்றச் செயல் ஒன்று, குற்றவியல் நடுவர் ஒருவரால் சுருக்குமுறையில் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VII

### பல்வகை

**26.** இந்தச் சட்டத்தின்படி அலுவற்பணிகளை ஆற்றுவதற்காக அமர்த்தப்பட்ட அலுவலர் அல்லது பணியாளர் தொகுதியினர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளின்படி அரசுப் பணியாளர் ஒருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும். அலுவலர்கள் அரசுப் பணியாளர்கள் ஆவர்.

45/1860.

**27.** உரிமையியல் நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின் வகையம் எதுவும் பொருந்துகிற பொருட்பாடு எதனையும் பொறுத்து, அதிகாரவரம்பினைக் கொண்டிருத்தல் ஆகாது மற்றும் இந்தச் சட்டத்தாலோ அல்லது அதன் வழியாலோ செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனையும் பொறுத்து, உறுத்துக்கட்டளை எதுவும், உரிமையியல் நீதிமன்றம் எதனாலும் வழங்கப்படுதல் ஆகாது. உரிமையியல் நீதி மன்றங்களின் அதிகாரவரம்பு தடை செய்யப் படுகிறது.

**28.** மைய அரசு, மாநில அரசுகள் அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பு அல்லது அரசு அலுவலர் எவருக்கும் எதிராக, இந்தச் சட்டத்தை அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது ஆணைகள் எவற்றையும் ஒட்டி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் உரிமை வழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**29.** இந்தச் சட்டத்தின் வகையங்களை செயல்திறப்படுத்துகையில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையென அல்லது உகந்ததென அதற்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகையங்களைச் செய்யலாம்: இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கு அதிகாரம்.

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலஅளவு ஒன்று கழிவுற்றபின்பு, பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

**30.** மைய அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவது குறித்து மாநில அரசுகளுக்கு பணிப்புரைகளை வழங்கலாம். பணிப்புரைகளை வழங்குவதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

**31.** மைய அரசு, மாநில அரசுகளால் இந்தச் சட்டத்தின் வகையங்கள் செயற்படுத்தப்படுதலின் முன்னேற்றத்தை காலமுறைகளில் மறுஆய்வு செய்யலாம் மற்றும் கண்காணிக்கலாம். மறுஆய்வு செய்வதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

**32. (1)** மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம்.

(2) Without prejudice to the generality of the foregoing power, such rules may provide for—

(a) the manner of holding inquiry under section 5 subject to such rules as may be prescribed under sub-section (1) of section 8;

(b) the power and procedure of the Tribunal for other purposes under sub-section (2) of section 8;

(c) the maximum maintenance allowance which may be ordered by the Tribunal under sub- section (2) of section 9;

(d) the scheme for management of old age homes, including the standards and various types of services to be provided by them which are necessary for medical care and means of entertainment to the inhabitants of such homes under sub-section (2) of section 19;

(e) the powers and duties of the authorities for implementing the provisions of this Act, under sub-section (1) of section 22;

(f) a comprehensive action plan for providing protection of life and property of senior citizens under sub-section (2) of section 22;

(g) any other matter which is to be, or may be, prescribed.

(3) Every rule made under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of State Legislature, where it consists of two Houses or where such legislature consists of one House, before that House.

(2) முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள்,—

(அ) 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விதிகளுக்கு உட்பட்டு, 5 ஆம் பிரிவின்படி விசாரணை நடத்தும் முறை;

(ஆ) 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படியான பிற நோக்கங்களுக்காக, தீர்ப்பாயத்தின் அதிகாரமும் நெறிமுறையும்;

(இ) 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி தீர்ப்பாயத்தால் ஆணையிடப்படலாகும் பேணுகைப் படித்தொகையின் பெரும் அளவு;

(ஈ) 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி முதியோர் இல்லங்களை மேலாண்மை செய்வதற்காக, அத்தகைய இல்லங்களின் தரநிலைகள் மற்றும் குடியிருப்பவர்களுக்கு மருத்துவ கவனிப்பு மற்றும் பொழுதுபோக்கு வழிவகைகளுக்குத் தேவைப்படுகிற, அவற்றால் வகை செய்யப்பட வேண்டிய பல்வேறு வகைகளிலான பணிகள் உள்ளடங்கலான திட்டம்;

(உ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி இந்தச் சட்டத்தின் வகையங்களை செயற்படுத்துவதற்கான அதிகார அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(ஊ) 22 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி மூத்த குடிமக்களின் உயிர் மற்றும் சொத்திற்கு பாதுகாப்பு அளிப்பதற்கான விரிவான செயல் திட்டம் ஒன்று;

(எ) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் ஏதேனும் பிற பொருட்பாடு ஆகியவற்றிற்கு வகை செய்யலாம்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடியவிரைவில், மாநில சட்டமன்றம், இரண்டு அவைகளைக் கொண்டிருக்கிறவிடத்து, அவை ஒவ்வொன்றின் முன்பும் அல்லது அத்தகைய சட்டமன்றம் ஓர் அவையினைக் கொண்டிருக்கிறவிடத்து அந்த அவையின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.